ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2269/6 - 2022 පෙබරවාරි මස 28 වැනි සඳුදා - 2022.02.28

*2269/6 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

(முத்திரை)

**கோட்டாபய ராஜபக்ஷ**

**சனாதிபதியின் பணிப்புரை**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 33 ஆவது உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதிய சனாதிபதியின் பணிப்புரையின்மூலம் "ஒரே நாடு, ஒரே சட்டம் என்பதற்கான சனாதிபதி செயலணி" தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்,

சொல்லப்பட்ட செயலணிக்கு ஒப்படைக்கப்பட்ட பணிகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்டிருந்த கால எல்லை 2022 பெப்புருவரி 28 ஆந் திகதியில் முடிவடைகின்றதாதலாலும்,

நாட்டின் சகல மாகாணங்களையும் உள்ளடக்கியவாறு பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதும் நிபுணர்கள் சபைகளின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதும் அவசியம் என்பதனாலும்,

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், மேற்போந்த செயலணியின் பணிகளைப் பொருத்தமான செயற்பாட்டுத் திட்டமொன்றினுள் வினைத்திறனாக மேற்கொண்டு முடிவுறுத்துவதற்காகச் செயலணியின் காலத்தை 2022 பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதியிலிருந்து மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கின்றேன்.

இரண்டாயிரத்துஇருபத்திரண்டாம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதியாகிய இன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகிரங்க இலச்சினையின்கீழ் கொழும்பில் வழங்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

**காமினீ செனரத்,**
சனாதிபதியின் செயலாளர்.

EOG 02-0692

1A - G 36226 — 370 (2022/02) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*